Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

Y.M.C.D

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    சித்திரை 30    [13-05-93]    வியாழக்கிழமை    ஓசை 84

## 600 ரூபா மேலதிக கொடுப்பனவு அடுத்த மாதம் முதல் கிடைக்கும்

எதிர்வரும் 1ஆம் திகதி தொடக்கம் சகல அரச ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் பெறுவோருக்கும் மாதாந்தம் 600 ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். இது தொடர்பாக முன்னர் வெளியிடப்பட்ட சுற்று நிருபங்கள் யூன் மாதம் 1ஆம் திகதி தொடக்கம் இரத்துச் செய்யப்படும். தற்காலிக, அமைய, நாட் சம்பள ஊழியர்களுக்கும், கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் இந்த கொடுப்பனவு கிடைக்கும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. இதுகுறித்துக் கருத்து வெளியிட்ட அதிகாரி ஒருவர் 2000 ரூபாவிற்கும் குறைவான மாதாந்தச் சம்பளம் பெறுவோருக்கு ஏற்கனவே இந்த 600 ரூபா கொடுப்பனவு (4 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. தே. கட்சிக்குள் உட்பூசல் தீவிரம்

## ஹேமாவின் பிரவேசம் பலருக்கு பெரும் சீற்றம்

(கொழும்பு)

கொல்லப்பட்ட சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் மனைவி ஹேமா பிரேமதாசாவின் அரசியலில் ஈடுபடுவதான முடிவு ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியினுள் தலைமைத்துவத்திற்கான போட்டியை அதிகரித்துள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இப்போட்டியின் வெளிப்பாடாக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா நடைமுறைப்படுத்திய கிராம எழுச்சித் திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், ஏயர் லங்கா பணிப்பாளர் சபையை நீக்க புதிய ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அறிய வருகின்றது.

இதுகுறித்து பி. பி. ஸிக்கு பேட்டியளித்த 'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் ஐவன் தெரிவிக்கையில், புதியஜனாதிபதி மிகிந்தலையில் நடைபெறவுள்ள கிராமிய எழுச்சி வைபவங்களை நிறுத்தியமையும், எயர்லங்கா பணிப்பாளர் சபையை நீக்கியமையும் ஐ. தே. கட்சிக்குள் காணப்படும் உட்கட்சிப் பூசலைக் காட்டுவதாகவே உள்ளது எனத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், புதியஜனாதிபதியின் இந் நடவடிக்கையானது உட்கட்சிப்பூசலின் உச்சக்கட்டத்தைக் (4ஆம் பக்கம் பார்க்க)

## ராக்கிங்கில் மாணவன் பலி

அங்குனகோல பெலச விவசாயக் கல்லூரியில் டிப்ளோமா பயிற்சி நெறியை மேற்கொண்டுவந்த மாணவன் சக மாணவரின் ராக்கிங் காரணமாக மரணமடைந்துள்ளார்.

மரணமான இருபது வயதான மாணவன் தெகியோவத்தை மேலதிக கல்விப் பணிப்பாளரின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரின் மரணம் தொடர்பாக பொலிஸார் 12 மாணவர்களை கைது செய்துள்ளனர்.

## வெளியுறவு கொள்கை மாற்றமில்லை

(கொழும்பு)

சிறிலங்கா அரசின் வெளியுறவுக் கொள்கையில் எந்த மாற்றமும் இருக்கமாட்டாது என வெளியுறவுத்துறை அமைச்சர் ஹரல்ட் ஹேரத் நேற்று விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## நியமனம்

(யாழ்ப்பாணம்)

தேசிய தொழில் பயிலுனர் சபையினால் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் சுமார் 28 எழுதுவினைஞர் மற்றும் தட்டெழுத்தாளர்கள் யாழ். கல்வித்திணைக்களத்தில் தற்காலிக நியமனம் பெற்றுள்ளனர்.

இவர்கள் நேற்று யாழ். கல்வித்திணைக்களத்தில் தமது அலுவல்களைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர். மேலும் இவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதாந்த வேதனமாக 500 ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் சேவைக்காலம் ஆறுமாதமாக வரையறுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

# ஜெட் விமானங்கள் அகோர குண்டுவீச்சு

## கிளிநொச்சியில் பெண் பலி; ஐந்து பேர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் சிறிலங்கா சுப்பர் சொனிக் விமானங்கள் நடாத்திய குண்டு வீச்சுத் தாக்குதல்களினால் பெண்மணி ஒருவர் கொல்லப்பட்டதுடன் ஐவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக் காலை 9-30 மணியளவில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கனகபுரம் பகுதியை வட்டமிட்ட இரண்டு சுப்பர் சொனிக் விமானங்கள் இப் பகுதியில் தாழப் பறந்து நான்கு குண்டுகளை வீசின.

இக் கண்மூடித்தனமான குண்டுவீச்சுத் தாக்குதல்களினால் நாகேஸ்வரி தங்கராசா (செல்வா நகர், கிளிநொச்சி) என்பவர் பலியானார். இதன் போது இத் தாக்குதல்களுக்கு இலக்காகி மேலும் ஐவர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களது பெயர் விபரங்கள் கிடைக்கவில்லை.

## நாட்டின் தலைமையை கைப்பற்ற ஹேமா முயற்சி

(கொழும்பு)

திருமதி பிரேமதாசா நாட்டின் எதிர்காலத் தலைவராக ஆரம்பத்திலேயே பல சாதகங்களை கொண்டிருப்பதாக பி. பி. ஸி செய்தியாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அச்செய்தியில் மேலும் எப்போதும் அவர் விளம்பரப்பிரியராக இருந்ததுடன் ஜனாதிபதி பிரேமதாசாவுடன் கிராமங்கள் முதல் வெளிநாடுகள் வரை நிழல்போல் தொடர்ந்தவர். அப்போதெல்லாம் தொலைக்காட்சியினுள் தம்மை 'பதிவு' செய்து கொண்டார் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

திருமதி ஹேமா பிரேமதாசா ஏற்கனவே கட்சி மகளிர் அமைப்பில் அதிகாரமுடைய தலைவராக விளங்கி

### லலித், பிரேமாவின் மனைவியர் அரசியலில்

## வவுனியா மருதோடையில்

## புக்காரா குண்டுத்தாக்கு; சிறுவர் பாடசாலை சேதம்

(வவுனியா)

வவுனியா பகுதியில் சிறிலங்கா விமானப்படையின் புக்காரா குண்டு வீச்சு விமானம் நடாத்திய தாக்குதல்களினால் சிறுவர் பாடசாலை ஒன்று பலத்த சேதமடைந்தது.

நேற்று முன்தினம் காலை 6-40 மணியளவில் வவுனியா மாவட்டம் மருதோடைப் பகுதியில் அமைந்துள்ள சிறுவர் பாடசாலை மீதே புக்காரா குண்டுவீச்சு விமானம் தாக்குதலை நடாத்தியது.

புக்காரா நடத்திய ரொக்கற் மோட்டர் தாக்குதல் மற்றும் கலிபர் தாக்குதல்களினால் இப் பாடசாலையின் கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன.

## புலிகளின் கண்ணிவெடியில் ஐந்து படையினர் படுகாயம்

ஜீப்வண்டி முற்றாகச் சேதம்

(கொழும்பு)

மன்னாரில் சிறிலங்கா இரா

ளது.

கடந்த 2ஆம் திகதி இடம்

பிரதமர் ரணில் கலந்துகொண்ட

தெரிவிக்கையில், புதியஜனாதி
பதி மிகிந்தலையில் நடைபெற
வுள்ள கிராமிய எழுச்சி வைப

தே. கட்சிக்குள் காணப்படும்
உட்கட்சிப் பூசலைக் காட்டுவ
தாகவே உள்ளது எனத் தெரி

நடவடிக்கையானது உட்கட்
சிப்பூசலின் உச்சக்கட்டத்தைக்
(4ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டின் தலைமையை கைப்பற்ற ஹேமா முயற்சி

(கொழும்பு)

திருமதி பிரேமதாசா நாட்டின் எதிர்காலத் தலைவராக ஆரம்பத்திலேயே பல சாதகங்களை கொண்டிருப்பதாக பி. பி. ஸி செய்தியாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அச்செய்தியில் மேலும் எப்போதும் அவர் விளம்பரப்பிரியராக இருந்ததுடன் ஜனாதிபதி பிரேமதாசாவுடன் கிராமங்கள் முதல் வெளிநாடுகள் வரை நிழல்போல் தொடர்ந்தவர். அப்போதெல்லாம் தொலைக்காட்சியினுள் தம்மை'பதிவு'செய்து கொண்டார் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

திருமதி ஹேமா பிரேமதாசா ஏற்கனவே கட்சி மகளிர் அமைப்பில் அதிகாரமுடைய தலைவராக விளங்கி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் ஆளும் ஐ. தே. கட்சியினுள் ஆண் ஆதிக்கமே திகழ்கிறது. எனவே திருமதி ஹேமா பிரேமதாசாவின் பதவி ஆசையை அவர்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## லலித், பிரேமாவின் மனைவியர் அரசியலில்

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலி, பிரேமதாசா ஆகியோர்களின் மனைவிமார்களையும் அரசியலுக்குக் கொண்டுவர இருதரப்பிலும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

திருமதி ஸ்ரீமணி அத்துலத்முதலியை அரசியலுக்குக் கொண்டுவர ஜ. ஐ. தே. முன்னணிக்குள் முயற்சி நடைபெறுகிறது. ஆரம்ப கட்டமாக மாகாணசபைத் தேர்தல் பிரசாரத்தில் அவரை கட்சி ஈடுபடுத்தத் திட்டமிட்டிருந்தது

(4ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத் தளபதி சிசில் ஓய்வுபெற விருப்பம்

## பொலிஸ்மா அதிபரும் விண்ணப்பம்

(கொழும்பு)

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல்சிசில் வைத்தியரட்னா தமது பதவி ஓய்வு பெறுவதற்கான விண்ணப்பத்தை பாதுகாப்பு அமைச்சிடம் சமர்ப்பித்துவிட்டார் இவரின் இடத்திற்கு மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா நியமிக்கப்படலாம் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சேவை மூப்பின் காரணமாக ஓய்வு பெறும் சிசில் வைத்தியரட்னாவின் சேவைக் காலம் ஜனாதிபதியின் விருப்பின் பேரிலேயே நிர்ணயிக்கப்படுவது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பொலிஸ்மா அதிபர் ஏனஸ்ட் பெரேரா ஒய்வுபெற விண்ணப்பித்த போதிலும் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இரகசிய பொலிஸ் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சந்திர ஜெயவர்தனா ஓய்வு பெற்றுள்ளார். ஆமர் வீதி குண்டுவெடிப்பில் பலியான உயர் பொலிஸ் அதிகாரி ரொனி குணசிங்காவின் இடத்திற்கு பொலிஸ் சுப்ரின்டன் ரஞ்சித் பெரேரா நியமனம் பெற்றுள்ளார்.

இராணுவ தளபதிக்கு இரண்டாம், மூன்றாம் இடங்களை வகித்த மேஜர்ஜெனரல்கள் திலக் பரணகம, சி. ஜே. அபேரட்ன ஆகியோரும் இம்மாத இறுதியில் ஓய்வுபெறுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மாகாணசபை தேர்தல் ஏற்பாடுகள் பூர்த்தி

மாகாணசபைத் தேர்தல்கள் திட்டமிட்டவாறு எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் எனவும் இந்த தேர்தல் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடைபெறுவதை உறுதிப்படுத்துமாறும் சம்பந்தப்பட்டவர்களை ஜனாதிபதி டி பி.விஜய துங்கா கேட்டுக் கொண்டுள்ளார்.

தேர்தல்கள் நடைபெறும் சகல மாவட்டங்களிலும் இப்போதும் தேர்தல் நடைபெறும் தினத்தன்றும் குறிப்பாக தேர்தல்கள் நடந்து முடிந்த பின்னரும் சட்டமும், ஒழுங்கும் பேணப்படவேண்டும் என்றும் இதை உறுதிசெய்வது சட்டத்தை அமுல்செய்யும் அதிகாரிகளின் கடமையாகும் என்றும் அவர் வலியுறுத்தி இருக்கிறார்.

இந்த சமயத்தில்தான் கட்சிகளுக்கிடையே உள்ள போட்டா போட்டி அதிகமாக இருக்கும் என்றும் எனவே சகலரும் நிதானமாக நடந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## மாகாணசபை தேர்தலுக்கு பாடசாலைகள் மூடப்படும்

(கொழும்பு)

மாகாண சபைத்தேர்தல்கள் நடைபெற விருக்கும் ஏழு மாகாணங்களிலும் உள்ள சகல பாடசாலைகளும் இம்மாதம் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் மூடப்பட்டிருக்கும்.

மாகாணசபை தேர்தல் நடத்தப்படுவதற்கென பெரும் தொகையான பாடசாலை கட்டடங்கள் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகள் இதனால் பாதிப்படைய மாட்டாதென்றும் அவை வழமைபோல் இயங்கும் என்றும் கல்வி உயர் கல்வி அமைச்சு விடுத்த அறிக்கை ஒன்று கூறுகின்றது.

(யாழ்ப்பாணம்)

தேசிய தொழில் பயிலுனர் சபையினால் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் சுமார் 28 எழுதுவினைஞர் மற்றும் தட்டெழுத்தாளர்கள் யாழ். கல்வித்திணைக்களத்தில் தற்காலிக நியமனம் பெற்றுள்ளனர்.

இவர்கள் நேற்று யாழ் கல்வித்திணைக்களத்தில் தமது அலுவல்களைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர். மேலும் இவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதாந்த வேதனமாக 500 ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் சேவைக்காலம் ஆறுமாதமாக வரையறுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

# புக்காரா குண்டுத்தாக்கு; சிறுவர் பாடசாலை சேதம்

(வவுனியா)

வவுனியா பகுதியில் சிறிலங்கா விமானப்படையின் புக்காரா குண்டு வீச்சு விமானம் நடாத்திய தாக்குதல்களினால் சிறுவர் பாடசாலை ஒன்று பலத்த சேதமடைந்தது.

நேற்று முன்தினம் காலை 6-40 மணியளவில் வவுனியா மாவட்டம் மருதோடைப் பகுதியில் அமைந்துள்ள சிறுவர் பாடசாலை மீதே புக்காரா குண்டுவீச்சு விமானம் தாக்குதலை நடாத்தியது.

புக்காரா நடத்திய ரொக்கற் மோட்டர் தாக்குதல் மற்றும் கலிபர் தாக்குதல்களினால் இப் பாடசாலையின் கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன.

பிரதமர் ரணில் கலந்துகொண்ட

## கூட்டத்தில் துப்பாக்கியுடன் நடமாடியவர் கைது

(கொழும்பு)

தேர்தல் கூட்டத்தில் துப்பாக்கியுடன் நடமாடியவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, தங்காலையில் நடந்த கூட்டத்தில் உரையாற்றிக் கொண்டிருந்த வேளையில் அங்கு சந்தேகத்திற்கு இடமானவகையில் நடமாடியதாகவும் இவரை பொலிசார் சோதனையிட்டவேளையில் அவரிடம் துப்பாக்கி ஒன்றும் இரண்டு தோட்டாக்களும் இருப்பதை பொலிசார் கண்டு பிடித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் வனத் முல்ல பகுதியை சேர்ந்தவர் எனத்தெரியவருகின்றது.

## சந்திரிகாவை கொல்ல அரசியல்வாதி முயற்சி

[கொழும்பு]

எதிர்க்கட்சி கூட்டு முன்னணியின் தென்மாகாணசபை வேட்பாளர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கவை கொலைசெய்யதிட்டமிடப்பட்டுள்ளதாக நம்பகரமான தகவல் கிடைத்துள்ளது என கறுவாக்காட்டு பொலிசாரிடமும், பொலிஸ்மா அதிபரிடமும் முறையீடு செய்யப்பட்டுள்ளது

முக்கிய அரசியல்கட்சி உறுப்பினருடன் ஒரு துப்பாக்கி நபர் தனது கூட்டங்களில் நடமாடுவதாகவும், இவருக்கு ஒரு பொலிஸ் அதிகாரி உடந்தையாக இருப்பதாகவும் திருமதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்தார். குறிப்பிட்ட நபருக்கு பொலிஸ் நிலையத்திலிருந்தே துப்பாக்கி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை மாகாண சபைத்தேர்தல் அண்மிக்கும் இந்நேரத்தில் பல கொலைகள் இடம்பெறலாம் என தான் அஞ்சுவதாக கொழும்பு மாவட்ட சுதந்திரக் கட்சி உறுப்பினர் டி. எம். எல். பி. குணரட்ண தெரிவித்துள்ளார்.

பிரச்சினைக்கு தீர்வுகாண

## மக்களை கொலைசெய்வதை அரசு கைவிட வேண்டும்

(கொழும்பு)

மக்களைக் கொலை செய்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முறையைப் புதிய ஜனாதிபதி டி. பி. விஜய துங்கா இல்லாமல் செய்வார் என்று தான் நம்புவதாக மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா தெரிவித்தார்.

மக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் புதிய ஜனாதிபதிக்குப் பாராளுமன்றத்தில் வாழ்த்துத் தெரிவித்துப் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இப்போது நிலவும் ஆட்சி முறையைப் பாராளுமன்றத்துக்கு பொறுப்பாக இருக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதம மந்திரியைக் கொண்டதான பாராளுமன்ற ஜனநாயக ஆட்சிக்கு மாற்றும்படி எதிர்க்கட்சிகள் முன்வைத்த கோரிக்கையைக் கவ

(4ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளின் கண்ணிவெடியில் ஐந்து படையினர் படுகாயம்

ஜீப்வண்டி முற்றாகச் சேதம்

(கொழும்பு)

மன்னாரில் சிறிலங்கா இராணுவ ஜீப் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய கண்ணிவெடித்தாக்குதலில் ஜீப் முற்றாக சேதமடைந்துள்ளதாக சிறிலங்கா இராணுவ தலைமைப்பீடம் தெரிவித்துள்ளது.

கடந்த 2ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஓர் அதிகாரி உட்பட 5 படையினர் படுகாயம் அடைந்தனர் எனவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிராம சேவையாளர் உதவி அரசஅதிபர் முறுகல்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண விநியோகம் தொடர்பாகக் கோப்பாய் உதவி அரசாங்க அதிபருக்கும் மேற்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடமையாற்றும் சில கிராம சேவையாளர்களுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரண விநியோக அட்டைகளை வழங்குவது தொடர்பாகஏற்பட்ட கருத்து முரண்பாடு நேற்றைய தினம் மேற்படி இருதரப்பினருக்குமிடையே பெரும் முறுகல் நிலையை ஏற்படுத்தியது. இதனால் மேற்படி அலுவலகத்தில் இன்று நடைபெறவிருக்கும் வாராந்த கிராம சேவையாளர்களுக்கான கலந்துரையாடலை பகிஷ்கரிக்க இருப்பதாகத் தெரியவருகிறது மேலும் இவ் விடயம் தொடர்பாக யாழ். மேலதிக அரசாங்க அதிபரிடம் முறையீடு செய்ய உள்ளதாகவும் தெரிய வருகிறது.

பாடசாலை ஊழியர்கள்

## விண்ணப்ப முடிவுத் திகதி வடக்கிற்கு நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

வட கிழக்கு மாகாணசபையின் கீழ் உள்ள பாடசாலைகளில் நிலவுகின்ற ஆய்வுகூட நூலகப்பணியாளர், காவலாளர், பாடசாலைத் தொழிலாளர் மற்றும் சுகாதாரத் தொழிலாளர் ஆகிய பதவிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் இம்மாதம் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிவித்தலை திருக்கோணமலை கல்வி கலாசார விளையாட்டுத்துறை

(4ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழகத்தில் 800 பேர் மேலதிக அனுமதி

(கொழும்பு)

1991ஆம் ஆண்டில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த பல்கலைக்கழக அனுமதி பெற தகுதியானவர்களில் 800 பேர் மேலதிகமாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

நீதிமன்ற தீர்ப்பை அடுத்து பல்கலைக்கழக அனுமதி முறையில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதால் இவ்வாறு மேலதிகமாக தெரிவு செய்ய வேண்டி உள்ளது என கொழும்பு தினசரி ஒன்று தெரிவிக்கின்றது.

# தேநீரில் மயக்க மருந்து ரயில்பயணியிடம் கொள்ளை

## வடபகுதி புகையிரதத்தில் சம்பவம்

(வவுனியா)

ரயிலில் பயணம் செய்தவர் பக்கத்தில் இருந்தவர் கொடுத்த தேநீரைபருகியதும் மயக்க மடைந்தார். தாண்டிக்குளம் வந்ததும் அவரை வேறொருவர் எழுப்பியபோதே தான் மயக்கமடைந்ததையும் தனது உடைமைகள் பறிபோனதையும் உணர்ந்தார்.

மயக்கமான, தள்ளாடிய நிலையில் ரயிலில் இருந்து இறங்கிய மல்லாவி ஒட்டங்குளம் வாசியான வேலுப்பிள்ளை இரவீந்திரன் (வயது 28) என்பவர் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைதெரிவிக்கையில்,

நான் கோட்டை ரயில்நிலையத்திலிருந்து வவுனியாவரும் இரவு ரயிலில் இரண்டாம் வகுப்பில் பயணஞ் செய்தேன்.

எனக்கு முன் நாகரிக உடையில் இளைஞன் ஒருவர் இருந்தார். ரயில் பயணம் ஆரமபித்தது. அவ்விளைஞர் தான் ஒரு வர்த்தகரெனவும், அக்கரைப் பற்றைச் சொந்த இடமாகக் கொண்டதாகவும் வர்த்தக விடயமாக வவுனியா செல்லுவதாகவும் தன்னை அறிமுகப்படுத்தினார். முன்பின் அறிமுகமில்லாத இவர் என்னுடன் நீண்டகால நண்பனைப்போல் பழகினார். பொல்காவலையை ரயில் கடந்ததும் நான் அரை நித்திரைத் தூக்கத்தில்இருந்தேன் அபபோது என்னைகதட்டி எழுப்பி தான்கொண்டுவந்திருந்ததேநீரை தந்தார் நானும்அதைத்தட்டிக்கழிக்க முடியாத நிலையில் வாங்கி பருகினேன்.

எனது வாழ்க்கையில்இப்படியான தேநீரை அருந்தியது கிடையாது.அது மிகச் சுவையாக இருந்தது. எங்கே இதை வாங்கினீர்கள் என்று நான் அவரைக்கேட்டபோது தனது காதலி தயாரித்து தந்ததாக பதிலளித்தார். சில நிமிட நேரத்தில் எனக்கு என்ன நடந்தது என்பது தெரியாது. தாண்டிக்குளம் ரயில் நிலையம் வந்த பிறகுதான் விடையம் தெரிந்தது என்றார்

மேற்படி நபர் தேநீரில் மயக்க மருந்து கலந்து பயணிகளுக்கு கொடுத்து பெறுமதி வாய்ந்த பொருள்களை அபகரிக்கும் கோஷ்டியிடம் சிக்கி தனது இரு தங்க மோதிரங்களையும். கைக்கடிகாரம், ரொக்கப்பணம் போன்றவற்றையும் இழந்தார்.

---

## வரி விளம்பரம்

### கசற் றேடியோக்களா! கடிகாரங்களா!!

உங்கள் கடிகாரங்களையும், றேடி யாக்களையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள்:
டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ்
284,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை:கண்டி வீதி,சாவகச்சேரி (சி/6608)

### வியாபாரிகட்கு

வேஸ், நூல் வகைகள் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு அழகு சாதனப் பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள ஜெயா அழகு சாதனமாளிகை 177A, மின நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-6613)

---

### சாளரம் இலக்கிய நிகழ்வு

சாளரம் இதழ் நடத்தும் இலக்கிய நிகழ்வு இன்று முற்பகல் பத்து மணிமுதல் மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் பாடசாலை அதிபர் பொ. சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வின் போது ''உதயத்தின கதிர்களை உள்ளே வரவிடுங்கள்'' என்ற தலையங்கத்தின் கீழ் செல்வி வே. அருந்ததி உரைநிகழ்த்தவுள்ளார்.

### கருத்தரங்கு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகச் சுகாதார நிலையம் நடத்தும் கருத்தரங்கு தொடரின் இரண்டாவது அமர்வு இன்று பிற்பகல் நான்கு மணியளவில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. வைத்திய கலாநிதி எஸ். பி. ஆர். சீர்மாறன் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கருத்தரங்கு தொடரில் பேராசிரியர் கே பாலசுப்பிரமணியம், வைத்திய கலாநிதி திருமதி வி. எம். கருணாகரன், வைத்திய கலாநிதி ஆர். செய்வேந்திரன், வைத்திய கலாநிதி என் சிவராசா, வைத்திய நிபுணர் எஸ் ஆனந்தராசா ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

### கொழும்பு

---


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

இப்பல்கலைக்கழகத்தில் பின்வரும் நிரந்தரப பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமானவிண்ணப்பதாரிகளிடமிருந்து 1993-06 14ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் ளப்படும்.

**பதவி:**
பாதுகாப்புச் சேவகர் (தாழ்தரம்)

**சம்பளத் திட்டம்**
ரூபா 2310-8x40-2630/- மாதமொன்றுக்கு (1993-07-01ஆம்திகதியிலிருந்து) (இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ஏனையபடிகளும் வழங்கப்படும்)

**தகைமைகள்:**
1. எட்டாம்வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. விளையாட்டிலும் சமூகசேவையிலும் தீவரமாகப் பங்கு பற்றியிருத்தல் வேண்டும்.
3. உயரம்: 5அடி 6அங்குலங்களுக்கு குறையாமல்இருத்தல்வேண்டும் மார்பு: சாதாரண நிலையில் 32அங்குலங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.



# மாவீரர் படிப்பகம்

தமிழீழ மக்களின் கல்வி வளர்ச்சிக்கென ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வரும்

## பொது நூலகம் இது ...

சிறுவர்கள், பெரியோர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் தமது கல்வியறிவை வளர்க்கும் பொருட்டு பலதரப்பட்ட துறைசார் நூல்கள், கதைகள் ஆகியவற்றுடன் உள்ளூர் சஞ்சிகைகள், மற்றும் வெளியூர்ச் சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஆகியவற்றை வாசித்துப் பயன்பெறக் கூடிய வகையில் செயற்படுகிறது.


### தவறவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் காலை யாழ் கச்சேரிக்கும் பழைய பூங்காவீதிக்கும்இடையில்திறப்புக் கோர்வை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ் செயலக மேலதிக அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

### சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

[கொழும்புத்துறை]

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பரவலாகத் தினசரி சைக்கிள் திருட்டுக்கள் இடம்பெற்ற வண்ணம் உள்ளது.

இச் சைக்கிள் திருட்டுக்கள் சந்தைகளில், பாடசாலைகளில் ஆலயங்களில், அலுவலகங்கள் மக்கள் கூடும் இடங்களில் அனேகமாகத் திருடர்கள் திருடிச் செல்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் பூட்டியிருக்கும் சைக்கிள், சைக்கிள் பெல் மூடிகள் திருடப்பட்டு வருகிறது.

திருடர்கள் சைக்கிள்களைத் திருடிச் செல்லாத வண்ணம் பாதுகாப்பான இடங்களில் மக்கள் சைக்கிள்களை விட்டுச் செல்லுமாறு தமிழீழக் காவல் துறையினர் பல தடவைகள் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.[24]

### பரிசில் வழங்கப்பட்டது

''ஆதாரம்'' சஞ்சிகையில் 2ஆம் இதழுக்கான குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக பொன்னம்மான் கருத்தரங்கு மண்டபத்தில் கடந்த 6ஆம் திகதி நடைபெற்றது

குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்:- 1ஆம் பரிசு செல்வி இளையதம்பி சுயாவிறினி- வேம்படி மகளிர் கல்லூரி.

2ஆம் பரிசு தே. ஜெயதீர்வரன்- வவுனியா.

3ஆம் பரிசு செல்வி யோ. டிஸ்பகலா- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

முதலாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்டவர்களுக்கான பரிசில்களை யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் இளம்பரிதி அவர்கள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்

### எலுமிச்சம் பழம் இருபது ரூபாய்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தற்போது எலுமிச்சம் பழத்தின் விலை பன் மடங்கு அதிகரித்துக் காணப்படுகிறது.

ஒரு எலுமிச்சம் பழம் இருபது ரூபாய் வரை தற்போது யாழ். நகரில் விற்பனை செய்யப்பட்டுவருகிறது. (42)

### விவசாய பயிற்சிநெறி

மாவட்ட திருநெல்வேலி விவசாய பயிற்சி நிலையத்தில் விவசாய பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்கள் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை மாவட்ட விவசாய

# பாடசாலை மாணவரில் பலர் தொடர்ந்து கற்பதில்லை

யாழ்.மாவட்டப்பாடசாலைகளில் ஆண்டு 1இல் சேரும் மாணவர்களில் 40—45 வீதமானோர் தமது அடிப்படை கல்வியைப் பூர்த்தி செய்யாமலேயே ஆண்டு 11ற்கு முன்னர் வருடா வருடம் தமது கல்வியை இடை நிறுத்திக் கொண்டு பாடசாலைகளை விட்டு விலகி விடுகிறார்கள் என யாழ் கல்வித்திணைக்களத்தின் புள்ளிவிபரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

ஆண்டு 1இல் சேரும் மாணவர் தொகை 19500 ஆக இருந்து ஆண்டு 11இல் கற்கும் மாணவர்தொகை 10,000ஆக மட்டும்உள்ளதாகவும் ஏனைய மாணவர்கள் இடையில் விலகி விடுகிறார்கள் எனவும் அறியப்பட்டுள்ளது. அத்துடன் ஆண்டு 5இல்19358 மாணவர்கள் வகுப்பில் உள்ள போதிலும் ஆண்டு 6 இல் 17027 மாணவர்களாக குறைவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளதாகவும் இவ் அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

# உழைப்பாளர்களை இழந்த பெண்களுக்கு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ள உழைப்பாளர்களை இழந்த பெண்களுக்கானபுனர்வாழ்வுக்கான செயற்திட்டத்தை இனம்காண்பதற்கான ஆய்வுப் பட்டறை ஒன்று எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலக கருத்தரங்க மண்டபத்தில்தொடர்ச்சியாக இரு தினங்கள் இவ் ஆய்வுப் பட்டறை நடைபெறவுள்ளது. யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் மேற்படி ஆய்வுப்பட்டறையை ஒழுங்கு செய்துள்ளது. இவ் ஆய்வுப்பட்டறையின் போது பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களும் மேற்படி ஆய்வுக்காக தமது தரப்பிலான கருத்துக்களை முன் வைப்பார்கள் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இவ்வாறான அரச சார்பற்ற. தொண்டர் நிறுவனங்களிடமிருந்தும், இத்துறையில் ஆர்வமுள்ளவர்களிடமிருந்தும் ஆலோசனைகளும், கருத்துக்களும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ் ஆய்வுப்பட்டறையின் இறுதியில் மேற்படி விடயம் தொடர்பான செயற் திட்டம் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது.

# கிராமியப் பொருளாதார பயிற்சிக் கருத்தரங்கு

கிராமிய மட்டத்தில் சுயசார்ப்புப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான பயிற்சிக் கருத்தரங்கொன்று கடந்த 27-02-93ஆம் திகதி தொடக்கம் 05-03-93 வரை கிளிநொச்சி விவசாய பீட மண்டபத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்டது.

இந்தக் கருத்தரங்கில் கிராமிய மட்டத்திலான வளங்களை இனங்கண்டு உரியமுறையில் சுயதொழிலை ஊக்குவிப்பது தொடர்பான விரிவுரைகள் துறைசார்ந்த விரிவுரையாளர்களால் நடாத்தப்பட்டது.

இதில் கிளிநொச்சி கோட்ட கிராமங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட கிராமிய உற்பத்திக்குழு, கிராமிய அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம், புனர்வாழ்வுக் கழகம் போன்ற அமைப்புகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 150க்கும் மேற்பட்ட பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கிலே கலந்து கொண்ட பயிற்சியாளர்கள் எட்டுக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு குழுநிலை விவாதங்களும் நடாத்தப்பட்டன.

இந்த எட்டுக் குழுக்கள் மூலமும் முன்வைக்கப்பட்ட சமூக மேம்பாட்டுத் திட்டங்களான சுமார் 150 கும் மேற்பட்ட திட்டங்களை கிராமிய மட்டத்திலே நடைமுறைப்படுத்துவது தொடர்பாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மீளாய்வு செய்து வருகிறது.

### கட்டாக்காலிகள் தொல்லை

[யாழ்ப்பாணம்]

யாழ். இரண்டாம் குறுக்குத் தெரு பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. தெருவில் செல்கின்ற பாதசாரிகளுக்கும் கால்நடைகளுக்கும் மேற்படி கட்டாக்காலி நாய்களால் பெரும் தொல்லை ஏற்படுகின்றது. ஆடு, மாடு என்பவற்றைக் கண்டால் இந்த நாய்கள் கூட்டமாகச் சேர்ந்து அவற்றைக் கடித்துக் குதற முற்படுகின்றன. [22]

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகச் சுகாதார நிலையம் நடத்தும் கருத்தரங்கு தொடரின் இரண்டாவது அமர்வு இன்று பிற்பகல் நான்கு மணியளவில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. வைத்திய கலாநிதி எஸ். பி. ஆர். சீர்மாறன் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கருத்தரங்கு தொடரில் பேராசிரியர் கே பாலசுப்பிரமணியம், வைத்திய கலாநிதி திருமதி வி. எம். கருணாகரன், வைத்திய கலாநிதி ஆர். செய்வேந்திரன், வைத்திய கலாநிதி என். சிவராசா, வைத்திய நிபுணர் எஸ் ஆனந்தராசா ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

## கொழும்பு பயணமானார்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அஞ்சல் அதிபர் நாயகம் நேற்று முன்தினம் வாதுவகப்பல் மூலம் கொழும்பிற்கு பயணமானார்.

இவர் அங்கிருக்கும் நாட்களில் வடபகுதிக்கான தபால் விநியோகத்தில் மீண்டும் ஏற்பட்டுள்ள தாமதத்தை நீக்குவது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சந்திக்க இருப்பதாக தெரியவருகின்றது.

## துலா பயன்பாடு அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

எமது பாரம்பரிய முறையின்படி துலா - பட்டை மூலம் பயிர்களுக்குநீர்பாய்ச்சுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தொல்புரம், சுளிபுரம், கைதடி கொடிகாமம், உரும்பராய்ப் பகுதி விவசாயிகள் செய்யத் தொடங்கியுள்ளனர்.

இதற்காக தோட்டப் பகுதிகளிலும், வயல் பகுதிகளிலும் துலா அமைக்கும் பணியில் பலர் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது மண்ணெண்ணெய் தட்டுப்பாடும், மின்சாரம் இன்மையால் துலாவின் அவசியம் உணரப்பட்டுள்ளது.

## அபாயப்படி வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

1989 ஜனவரி மாதம் தொடக்கம் யூன் மாதம் வரையான ஆறு மாத காலப் பகுதியில் கடமையாற்றிய புங்குடுதீவு, நயினாதீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கான 'அபாயப்படி' அடுத்த வாரமளவில் வழங்கப்படும என தெரியவருகின்றது மாதம் ஒன்றிற்கு 500 ரூபா வீதம் ஆறு மாதங்களுக்கும் ரூபா மூவாயிரம் மேற்படி காலப்பகுதியில் கடமையாற்றிய ஊழியர்களுக்கு வழங்கப்படும் என சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (22)

---

மாதமொன்றுக்கு (1993-07-01 ஆம்திகதியிலிருந்து) (இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ஏனையபடிகளும் வழங்கப்படும்)

**தகைமைகள்:**

1. எட்டாம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. விளையாட்டிலும் சமூகசேவையிலும் தீவிரமாகப் பங்கு பற்றியிருத்தல் வேண்டும்.
3. உயரம்: 5 அடி 6 அங்குலங்களுக்கு குறையாமல்இருத்தல்வேண்டும் மார்பு: சாதாரண நிலையில் 32 அங்குலங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
4. வயது: விண்ணப்ப முடிவு திகதியில 18 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**தெரிவு:**

பொதுவுளச் சார்புப் பரீட்சைமூலமும்நேர்முகப் பரீட்சை மூலமும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவங்களை ரூபா 20/- ஐ நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/தாபனக் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் தபால் மூலம் விண்ணப்பப்படிவங்களைப் பெறவிரும்புவோர் அதற்கான வேண்டுகோளுடன்ரூபா 20/-க்கானகாசுக் கட்டளை/தபாற்கட்டளையுடன் 23X10 ச.மீ அளவுடையதும், சுயமுகவரியிடப்பட்டதும் ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுதிகதியின் பின்னர் கிடைக்கப் பெறும்விண்ணப்பங்களும், இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையிலிருந்து பெறப்படாதபடிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களும். கேட்கப்பட்ட விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படாதவிண்ணப்பங்களும்நிராகரிக்கப்படும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993 05-11 (சி/6612)

---

தமிழீழ மக்களின் கல்வி வளர்ச்சிக்கென
ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வரும்

## பொது நூலகம் இது ...

சிறுவர்கள், பெரியோர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் தமது கல்வியறிவை வளர்க்கும் பொருட்டு பலதரப்பட்ட துறைசார் நூல்கள், கதைகள் ஆகியவற்றுடன் உள்ளூர் சஞ்சிகைகள், மற்றும் வெளியூர்ச் சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஆகியவற்றை வாசித்துப் பயன்பெறக் கூடிய வகையில் செயற்படுகிறது.

சிறுவர்பகுதி, இரவல் வழங்கும் பகுதி, உடனுதவும் பகுதி, ஆகிய பிரிவுகளினூடு தமிழீழ மக்கள் யாவரும் பயன்பெற செயற்படும் நூலகம் இது.

**பலாலி வீதி,**
**கோண்டாவில்.**

(4862)

---

## தொடர்ந்தும் இயங்குகின்றது

**இராஜநாதன் இரவீந்திரவர்மன் அன்கோ**
[பட்டயக்கணக்காளர்]
*R.R. VARMAN & Co*
[Chartered Accountants]

எமது நிறுவனம் இல 166 ஆஸ்பத்திரி வீதி எ.எஸ் சங்கரப்பிள்ளை கட்டிடத்தில் வழமைபோல் தொடர்ந்தும் இயங்குகின்றது என்பதனை வாடிக்கையாளர்கட்கு அறியத்தருகின்றோம்.
[முன்னைய ஈ வி. தளையசிங்கம் அன்.கோ உட்பட]

[4863]

சி. குணசிங்கம்
முகாமையாளர்

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

## ஸ்ரீமதி யோகாம்மாள் நடராஜக் குருக்கள்

அன்னை மடியில்: 12-10-1916

அரன் அடியில்: 06-05-1991

திதி: 18-05-1993 (அபரபக்க அட்டமி)

பொறுமையின் சிகரமாய் பூவுலகில்
பெருமையுடன் வாழ்ந்த பெருந்தகையே!
ஈராண்டு போனாலும் வாழுகிறோம் உம்நினைவில்
அருமை அம்மா! அரனடியில் ஆறும்!

அன்புக் கணவர்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

(4846)

---

மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் இளம்பரிதி அவர்கள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்

## எலுமிச்சம் பழம் இருபது ரூபாய்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தற்போது எலுமிச்சம் பழத்தின் விலை பன் மடங்கு அதிகரித்துக் காணப்படுகிறது.

ஒரு எலுமிச்சம் பழம் இருபது ரூபாய் வரை தற்போது யாழ். நகரில் விற்பனை செய்யப்பட்டுவருகிறது. (42)

## விவசாய பயிற்சிநெறி

மாவட்ட திருநெல்வேலி விவசாய பயிற்சி நிலையத்தில் விவசாய பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்கள் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் காலை 9 30 மணிக்கு சமுகமளிக்குமாறு முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## 50 கலிபர் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

மண்டைதீவில் இருந்து நேற்று முன்தினம் மாலை சிறிலங்கா இராணுவத்தினரால் யாழ் நகரப் பகுதியை நோக்கி ஐம்பது கலிபர் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதலினால் பெரியளவிலான சேதம் எதுவும் ஏற்படவில்லை.

---

**SPECIAL ENGLISH**

சிறப்பு ஆங்கில
மொழிப்போதனை

★ ஒருங்கிணைந்த கற்கை நெறி

★ இலக்கண இலக்கிய மயமானது

★ உயர் கல்வி தொழில் நுட்ப,

TOEFL, ELT, NCE

உதவி ஆங்கில ஆசிரியர்
தெரிவுப் பரீட்சை

மாணவர்கட்கு உரியது

ஆரம்பம்
12.5.1993 பி.ப. 3மணி

ஆசிரியர்
த. ந. பஞ்சாட்சரம்

மேலதிக விபரங்கட்கு
நிர்வாகி
Science Hall
Kannathiddi

[6614]

---

நடாத்தப்பட்டது.

இந்தக் கருத்தரங்கில் கிராமிய மட்டத்திலான வளங்களை இனங்கண்டு உரியமுறையில் சுயதொழிலை ஊக்குவிப்பது தொடர்பான விரிவுரைகள் துறைசார்ந்த விரிவுரையாளர்களால் நடாத்தப்பட்டது.

இதில் கிளிநொச்சி கோட்ட கிராமங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட கிராமிய உற்பத்திக்குழு, கிராமிய அபிவிருத்திச் சங்கம், சன சமூக நிலையம், புனர்வாழ்வுக் கழகம் போன்ற அமைப்புகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 150க்கும் மேற்பட்ட பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கிலே கலந்து கொண்ட பயிற்சியாளர்கள் மட்டத்திலே நடைமுறைப்படுத்துவது தொடர்பாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மீளாய்வு செய்து வருகிறது.

## கட்டாக்காலிகள் தொல்லை

[யாழ்ப்பாணம்]

யாழ். இரண்டாம் குறுக்குத் தெரு பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. தெருவில் செல்கின்ற பாதசாரிகளுக்கும் கால் நடைகளுக்கும் மேற்படி கட்டாக்காலி நாய்களால் பெரும் தொல்லை ஏற்படுகின்றது. ஆடு, மாடு என்பவற்றைக் கண்டால் இந்த நாய்கள் கூட்டமாகச் சேர்ந்து அவற்றைக் கடித்துக் குதற முற்படுகின்றன. [22]

---

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-05-13

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமினுள் கொண்டு செல்கையில் ஏற்பட்ட சமரில்வீரச்சாவெய்திய,

**அமல்/பணக்காரன்** (மிக்கேல்பிள்ளை அமலதாஸ்- 89, புதிய கடற்கரைவீதி, குருநகர்-யாழ்)

1988 ஆம் ஆண்டு விழுப்புண் அடைந்த நிலையில் யாழ்-மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும்போது வீரச்சாவெய்திய.

**சுமன்** (— திருமலை)

மட்டு-நாசிவன்தீவில் தேசவிரோத சக்திகளினால் வெட்டிக்கொலை செய்யப்பட்டு எம்மைப்பிரிந்த.

**சாபீர்** (சரிபுதீன் முகமட்சாபீர்-தியாவெட்டவான்-மட்டு)

யாழ்-வெற்றிலைக்கேணியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

**கப்டன் கரேந்திரன்** (செல்வவினாயகம் ஞானசேகரன் - ஞானசேகரன் வீதி, நெடியகாடு, வல்வெட்டித்துறை-யாழ்)

1989 ஆம் ஆண்டு யாழ்-சுன்னாகத்தில் தேசவிரோத சக்திகளினால் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டு எம்மைப்பிரிந்த.

★ **முத்துக்குமாரு** (கோபாலகிருஷ்ணன்-உடுவில் கிழக்கு, உடுவில-யாழ்)

மணலாறு-நெடுங்கேணிப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களின் போது படுகொலை செய்யப்பட்ட 09 தமிழர்கள் மற்றும் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட நெடுங்கேணிமகாவித்தியாலய மாணவன்.

1990 ஆம் ஆண்டு யாழ்-வைத்தியசாலையில் மூளைக் காய்ச்சல் நோயின் காரணமாக எமைப்பிரிந்த.

**உஷா** (பசுபதி பாலச்சந்திரன்-நாரந்தனை, ஊர்காவற்றுறை-யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக் குறி இடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6610)

சிந்தனைக்கு

நீ சொல்வதுதான் சரி என்று நீண்டநேரம் சாதித்தால் கூட நீ சொல்வது தவறாகி விடலாம்.
- யூதப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 13-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## எல்லைகளைக் கடக்க டி.பி. முற்படுகிறாரா?

தமிழ் மக்களுக்கு அதிர்ச்சி அளிக்கக் கூடிய விடயமொன்றை சிறிலங்கா ஜனாதிபதி வெகுசுலபமாக ஏதோ பற்றற்ற விதத்தில் தெரிவிப்பது போன்று வெளியிட்டுள்ளார். வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை நீக்குவது குறித்துப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து நான்கு ஐந்து தினங்களில் முடிவைத் தெரிவிப்பதாகக் கூறியதே இவ் அதிர்ச்சியான செய்தியாகும்.

திரு. டி. பி. விஜயதுங்காவின் இவ் அறிவிப்பானது, பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு அவர் உடன்பட்டதாக இல்லாதுவிடினும், பொருளாதாரத் தடைக்கும், தனக்கும் எந்த விதத்திலும் சம்பந்தம் இல்லை என்ற ஒரு பற்றற்ற நிலையில் இருந்து பேசப்பட்டது போன்றும், இப் பொருளாதாரத் தடையின் முக்கியமான தீர்மானங்கள் யாவும் பாதுகாப்பு அமைச்சின் முழுமையான பொறுப்பு என்பது போலவும் உள்ளது.

புதிய ஜனாதிபதியின் இப்பதிலானது தர்க்கபூர்வமாக ஏற்புடைய தொன்றாகிலும், அது யதார்த்த பூர்வமாக ஒரு தந்திரமான 'சிறந்த' அரசியல்வாதியின் நழுவல் ரீதியான பதிலுக்கு ஒப்பானது, ஏனெனில் சிறிலங்காவின் அரசியலமைப்பின்படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சகல தீர்மானங்களையும் மேற்கொள்ளும் சக்தி படைத்தவர். அதிலும் திரு.டி.பி விஜயதுங்கா சிறிலங்காவில் ஜனாதிபதி அதிகாரங்களை மிக உயர்ந்தளவில் பயன்படுத்தியதிரு. ஜே.ஆர், ஜெயவர்த்தனா, திரு. ஆர்.பிரேமதாசா ஆகிய இரு ஜனாதிபதிகளின் கீழ் அமைச்சுக்களில்கடமைஆற்றியவர். ஆகையினால். ஜனாதிபதியின் உயர் அதிகாரங்கள் பற்றியோ, அன்றி அவற்றின் வீச்செல்லை பற்றியோ அவருக்கு ஒன்றும் தெரியாததல்ல. இந்நிலையில், பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுடன் பேசிய பின்னர் அறிவிப்பதாக அவர் கூறிபிருப்பது 'ஒரு வெற்றிகரமான நழுவல்' என்றே கூறலாம்.

மேலும், புதிய ஜனாதிபதி வடக்கு - கிழக்குப் போரில் பொருளாதாரத் தடையைப் பாதுகாப்பு அமைச்சு ஏன் அமுலாக்குவதில் தீவிரமாக உள்ளது என்பதை அறியாதவரும் அல்ல. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் தனியாக இரா

# பிரேமாவின் இறுதிக் கிரியையில் சம்பிரதாயங்களை மீறிய ஹேமா

விதவை, கணவரின் ஈமச் சடங்கின்போது பேசுவது தேச வழமையில்லை. ஆனால் சாஸ்திர விரோதமான காரியங்களுக்குப் பெயர் போன திருமதி பிரேமதாசா தனது உணர்ச்சி பூர்வமான உரையின் போது பல முறை அழுததுடன் தான் அரசியலில் ஈடுபடப் போவதாகத் தெளிவாகக் கூறியுள்ளார். தனது கணவரின் பணியைத் தொடர்வதற்காகவே தான் அரசியலில் ஈடுபடப் போவதாகவும் தெரிவித்துள்ளார் என்று ஐலண்ட் பத்தி எழுத்தாளர் சுமின்ந்தா தெரிவிக்கிறார்.

பிரேமதாசா குடும்பத்தினரின் சார்பில் நன்றியுரையை மருமகன் றோகான் ஜெயக்கொடி நிகழ்த்துவது என்பது தான் ஏற்பாடு என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரியவருவதாக சுமின்ந்தா எழுதுகிறார். ஆனால் குடும்பத்தின் சார்பில் தான் பேசப் போவதாக வியாழனன்று திருமதி பிரேமதாசா டி. பி. விஜயதுங்காவுக்கு அறிவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருமதி பிரேமதாசா அரசியலில் இறங்கும் பட்சத்தில் அவர் விரும்பும் பதவி எது? ஒரு நியமன உறுப்பினராகத் தான் அவரால் பாராளுமன்றத்தில் நுழைய முடியும். பிரேமதாசா குடும்பத்துக்குச் சார்பான ஒரு நியமன உறுப்பினரை இராஜினாமாச் செய்ய வைத்து அதனால் ஏற்படும் வெற்றிடத்துக்கு திருமதி பிரேமதாசாவை நியமனம் செய்யவேண்டும். திருமதி பிரேமதாசா அமைச்சர் பதவியை வகிப்பதென்றால் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா அப் பதவிக்கு அவரை நியமிக்க வேண்டும். திருமதி பிரேமதாசா அரசியலில் இறங்குவதை வீரசிங்க மல்லிமாராட்சி, கொழும்பு நகரபிதா ரெட்ணசிறி ராஜபக்ஷ மற்றும் டாக்டர் ஜெயலத் ஜெயவர்தனா மற்றும் யு.என்.பியில் செல்வாக்குள்ள வர்த்தகரும் ஆதரிப்பதாகத் தெரிய வருகிறது என்று சுமின்ந்தா மேலும் தெரிவிக்கிறார்.

ஈமச்சடங்கு ஒழுங்குகளில் மேலும்பல மாற்றங்கள் இடம் பெற்றதாகவும் அவர் பத்தியில் குறிப்பிடுகிறார். இலங்கைத் தோட்டத்தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான் இரங்கல் உரை நிகழ்த்துவதாக இருந்தது. இனக்கலவரம் ஏற்படலாம் என்ற அச்சத்தினால்தொண்டமானைஉரை நிகழ்த்த வேண்டாம் என்று மூத்த அரசியல்வாதி ஒருவர் கேட்டுக் கொண்டார். இனக்கலவரம் எதுவும் இடம் பெறாது என்று அலட்சியமாக பி. பி. ஸிக்குப் பேட்டி வழங்கியவர்களில் ஒருவரான தொண்டமான் கடைசியில் பேசவில்லை.

அந்தக் கட்டுரையில் மேலும் மாகாணசபைத் தேர்தலின் பின் அமைச்சரவை மீளமைக்கப்படும் என்று தெரிவிக்கப் படுகிறது என்று நம்பகரமான அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டப்படுகிறது. பலஅமைச்சுக்களைப் பொறுப் பேற்றிருக்கும் பதில் ஜனாதிபதி விஜயதுங்கா சில அமைச்சுப் பொறுப்புக்களை கைவிடலாம் என்றும் கூறப்படுகிறது.

வெள்ளியன்று பிரேமதாசா கொலை செய்யப்பட்டது அமைச்சர்கள் பலருக்குத் தெரியாது. வெளிநாட்டு செய்திஸ்தாபனங்கள் கொலைச் செய்தியை வெளியிட்ட பிறகுதான் பல அமைச்சர்கள் தெரிந்து கொண்டார்கள்.

பிரேமதாசா கொலையுண்டதும் மேதின ஊர்வலத்தில் கலந்து கொண்ட அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தான் உடனடி நடவடிக்கையில் இறங்கியதாகத் தெரிவிக்கப் படுகிறது. அவரின் முயற்சியின் பேரில் தான் முப்படைத் தளபதிகள், பிரதம நீதியரசர் மற்றும் சட்டமாஅதிபர் ஜனாதிபதி செயலகத்துக்கு அழைக்கப்பட்டார்கள். ஜனாதிபதி செயலகத்தில் டி. பி. விஜயதுங்கா பதில் ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் எடுத்த பிறகு ஜனாதிபதியின் மரணம் அறிவிக்கப்பட்டது.

### புலிகள் தப்பிச் செல்வது

# அரசின் மெத்தனப்போக்கை எடுத்துக் காட்டுகிறது

### கிள்ளிவளவன் குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழ் நாட்டில் அகதிகள் முகாமிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் பாதுகாப்பு வலயத்தையும் மீறித் தப்பிச் செல்வது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மெத்தனப் போக்கையே காட்டுகிறது எனத் தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் திரு கிள்ளிவளவன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்து வருவதாக வாழப்பாடி ராமமூர்த்தியும் விடுதலைப் புலிகளின் கடத்தல் தங்கு தடையின்றி நடைபெறுவதாகச் சட்டப் பேரவை எதிர்க் கட்சித் தலைவர் திரு. பால சுப்பிரமணியமும் தெரிவித்த குற்றச்சாட்டுக்களை அ. தி. மு. க. அரசு சிறிதும் ஆராய்ந்து பாராமல் தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டமே இல்லை என்று மறுத்து வந்திருப்பதைத் திரு. கிள்ளிவளவன் நேற்று சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் சுட்டிக் காட்டியுள்ளார்.

மாமண்டுவில் மூன்று தடாக் கைதிகள் துப்பாக்கிச் சூட்டின்போது தப்பி ஓடியிருப்ப இலங்கைத் தீவிரவாதிகள் தப்பிச் சென்றிருப்பதும் தமிழக அரசின் மறுப்பு தவறானது என்பதை நிரூபிப்பதாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

### சி. பி. ஐயிற்கு ராவ் பாராட்டு

(டில்லி)

ராஜிவ் காந்தி கொலைவழக்கில் குற்றவாளிகளை கண்டு பிடிப்பதான பாராட்டிற்குரிய பணியொன்றை நிறைவேற்றியுள்ளமைக்காக இந்தியமத்திய புலனாய்வுக் கழகம் சி. பி. ஐ. இற்கு பிரதமர் பி. வி. நரசிம்மராவ் பாராட்டியுள்ளார்.

புதுடில்லியில் சி. பி. ஐ.நிறு

### 'வாதுவ' திரும்பியது

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறையில் மா இறக்கி முடித்த 'வாதுவ' கப்பல் நேற்றுமுன்தினம் மாலை கொழும்புநோக்கி புறப்பட்டது. (யோ)

### பருத்தித்துறை இறங்குதுறை விஸ்தரிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறை திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன.

### மகனை விடுவிக்ககோரி நீதிமன்றில் வழக்கு

(கொழும்பு)

கடந்த எட்டு மாதகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மகனை விடுதலை செய்யக் கோரி அவரின் தாய் ஆட்கொணர்வு மனு வழக்குதொடர்ந்துள்ளார்.

கொழும்பு 12இல் உள்ள ''லொட்ஜ்'' ஒன்றில் கைதாகிய சுன்னாகம் மேற்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த ஆனந்தராஜாவை விடுதலை செய்யக் கோரி அவரின் தாயார் அரியகுட்டி செல்லம்மா என்பவரே சட்டத்தரணி திருமதி வி. ஸ்ரீகாந்தா ஊடாக மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவை நீதியரசர்கள் டி.பி.எஸ். குணசேகரன், எதுசூரியா ஆகியோர் விசாரணைக்கு ஏற்று பிரதிவாதிகள் பதில் தாக்கல் செய்ய இம்மாதம் 27ஆம் திகதி வரை அவகாசம் வழங்கினர்.

இம்மனு தொடர்பாக செல்லம்மா கூறியிருப்பதாவது: எனது மகனுக்கு வயது 25. லொட்ஜ் ஒன்றில் றூம்போயாக வேலை பார்த்து வந்தவர். கடந்த செப்டம்பர் மாதம் 4-ம்திகதி 'லொட்ஜை' முற்றுகையிட்ட 4ஆம் மாடி சி. ஐ. டி. பொலிசாரால் என் மகனும் மேலும் 12 பேரும் கைது செய்யப்பட்டார்கள். மேலும் அவர் கைது செய்யப்படும்போது வெளிநாடு செல்ல ஆயத்தம் செய்து கொண்டிருந்தார் என குறிப்பிட்டுள்ளார்.

### மா. சபை தேர்தல் பிரசாரம் மீண்டும் சூடுபிடிக்க ஆரம்பம்

இலங்கையின் மாகாணசபை தேர்தல் மீண்டும் சூடு பிடிக்க தொடங்கியுள்ளது. லலித் அத்துலத்முதலி, பிரேமதாசா கொலையை தொடர்ந்து செயலிழந்து இருந்த கட்சிகள் மீண்டும் தமது பிரசார வேலைகளின் உற்சாகமாக ஈடுபட்டுள்ளனர் என கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

நாயக்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல்கள் வந்திருப்பதாகவும் இது தொடர்பாக பொலிசாருக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் இதற்கான நட

யின் நழுவல் ரீதியான பதிலுக்கு ஒப்பானது. ஏனெனில் சிறிலங்காவின் அரசியலமைப்பின்படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சகல தீர்மானங்களையும் மேற்கொள்ளும் சக்தி படைத்தவர். அதிலும் திரு.டி.பி விஜயதுங்கா சிறிலங்காவில் ஜனாதிபதி அதிகாரங்களை மிக உயர்ந்தளவில் பயன்படுத்திய திரு. ஜே.ஆர், ஜெயவர்த்தனா, திரு. ஆர்.பிரேமதாசா ஆகிய இரு ஜனாதிபதிகளின் கீழ் அமைச்சுக்களில்கடமைஆற்றியவர்.ஆகையினால். ஜனாதிபதியின் உயர் அதிகாரங்கள் பற்றியோ, அன்றி அவற்றின் வீச்செல்லை பற்றியோ அவருக்கு ஒன்றும் தெரியாததல்ல. இந்நிலையில், பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுடன் பேசிய பின்னர் அறிவிப்பதாக அவர் கூறிபிருப்பது 'ஒரு வெற்றிகரமான நழுவல்' என்றே கூறலாம்.

மேலும், புதிய ஜனாதிபதி வடக்கு - கிழக்குப் போரில் பொருளாதாரத் தடையைப் பாதுகாப்பு அமைச்சு ஏன் அமுலாக்குவதில் தீவிரமாக உள்ளது என்பதை அறியாதவரும் அல்ல. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் தனியாக இராணுவ நடவடிக்கை வெற்றி அளிக்கப் போவதில்லை என்ற அனுபவ ரீதியான முடிவின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டதே பொருளாதாரத் தடையாகும். இது இராணுவத் தரப்பினரின் மூளையில் மட்டும் உதித்த தொன்றல்ல. சிங்களப் பேரினவாத புத்திஜீவிகளின் மூளைகளில் உதித்து உருப் பெற்றதாகும்,

அத்தோடு, புதிய ஜனாதிபதி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக இருந்தவேளையில், தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்ததொன்றாகும். இவர் இராஜாங்க அமைச்சராக இருந்த வேளையிலேயே துவிச்சக்கரவண்டிஉட்படப் பல பொருள்கள் தடை செய்யப்பட்ட பொருள்களின் வரிசையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதும் பொருளாதாரத் தடை மேலும் தீவிரமானதுமாகும்.

இந்நிலையில் டி. பி. விஜயதுங்காவின் பொருளாதாரத் தடை நீக்குவது குறித்துப் பரிசீலனை செய்யப்படும் எனத் தெரிவித்துள்ளமையானது தன்னை ஓர் 'இனவாதி' அல்ல எனக் காட்டிக் கொள்ள முற்படும் நடவடிக்கையே ஆகும். இதேவேளை, பொருளாதாரத்தடை குறித்து பெரும் மாற்றங்கள் எதையும் டி.பி. விஜயதுங்காவல் சாதிக்க முடியுமா என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை என்பன குறித்து சிறிதளவு தளர்ச்சியைத் தானும் மேற்கொள்ள இராணுவத்தினர் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. பூநகரிப் பாதை விவகாரமே இதற்குச் சிறப்பான உதாரணமாகும்.

மேலே கூறப்பட்டது போன்று இல்லாமல் ஓர் அலுவலக வழக்கத்திற்கு ஏற்றாற்போல், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் கதைத்துவிட்டு, பொருளாதாரத் தடையை நீக்க டி. பி விஜயதுங்கா உத்தரவு இடுவாரேயானால் இனப்பிரச்சினைத் தீர்வில் புதிய ஜனாதிபதி சில எல்லைகளைத் தாண்ட முற்படுகின்றார் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. இது புதிய ஜனாதிபதி தனது நாட்டு மக்களுக்கான முதலாவது உரையில், ''வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காணுதல் வேண்டும் என்பதைப் பற்றி நான் உணர்ந்துள்ளேன். தேசிய நலனிற்காக உடன் இதற்குத் தீர்வொன்றைக் காணுதல் அவசியம்'' எனக் குறிப்பிட்டதற்கு ஏற்புடைய ஆரம்ப நடவடிக்கையாக இதனை நோக்கினும் தவறில்லை.

(சென்னை)

தமிழ் நாட்டில் அகதிகள் முகாமிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் பாதுகாப்பு வலயத்தையும் மீறித் தப்பிச் செல்வது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மெத்தனப் போக்கையே காட்டுகிறது எனத் தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் திரு [illegible] தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்து வருவதாக வாழப்பாடி ராமமூர்த்தியும் விடுதலைப் புலிகளின் கடத்தல் தங்கு தடையின்றி நடைபெறுவதாகச் சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. பால சுப்பிரமணியமும் தெரிவித்த குற்றச்சாட்டுக்களை அ. தி. மு.க.அரசு சிறிதும் ஆராய்ந்து பாராமல் தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டமே இல்லை என்று மறுத்து வந்திருப்பதைத் திரு. கிள்ளிவளவன் நேற்று சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் சுட்டிக் காட்டியுள்ளார்.

மாமண்டுவில் மூன்று தடாக் கைதிகள் துப்பாக்கிச் சூட்டின்போது தப்பி ஓடியிருப்பதும், சேலம், வேலூர் சிறைகளிலிருந்தும், காஞ்சிபுரம் அகதிகள் முகாமிலிருந்தும் [illegible]

## சி. பி. ஐயிற்கு ராவ் பாராட்டு

(டில்லி)

ராஜிவ் காந்தி கொலைவழக்கில் குற்றவாளிகளை கண்டு பிடிப்பதான பாராட்டிற்குரிய பணியொன்றை நிறைவேற்றியுள்ளமைக்காக இந்தியமத்திய புலனாய்வுக் கழகம் சி. பி. ஐ. இற்கு பிரதமர் பி. வி. நரசிம்மராவ் பாராட்டியுள்ளார்.

புதுடில்லியில் சி. பி. ஐ.நிறுவனத்தின் விருது வழங்கும் நிகழ்வில் திரு. நரசிம்மராவ் பேசினார்.

# நீதிபதி இராமசாமி மீதான கண்டனத்தீர்மானம்தோல்வி

[தமிழ்நாடு]

இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதி வி. இராமசாமிக்கு கண்டனம் தெரிவித்து அவரை பதவி நீக்கம் செய்யக்கோரி நாடாளுமன்ற மக்களவையில் கொண்டு வரப்பட்ட கண்டனத் தீர்மானம் தோல்வியுற்றுள்ளது.

எதிர்க்கட்சிகள் சார்பில் கொண்டு வரப்பட்ட இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக 196 பேர் வாக்களித்தார்கள். எனினும் எதிராக ஒரு வாக்குக் கூட அளிக்கப்படவில்லை 205 பேர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை வாக்கெடுப்பின் முடிவை அறிவித்த மக்களவைத் தலைவர் திரு. பாட்டில் அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளின்படி தீர்மானத்திற்கு போதிய பெரும்பான்மை ஆதரவு இல்லாததால் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை என தெரிவித்தார்.

தீர்மானம் நிறைவேற்றப் படவேண்டுமானால் அவைக்கு வந்துள்ள உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினரும், அவையின் மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையானோரும் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும்.

இந்திரா காங்கிரஸ் கட்சி வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை தீர்மானத்திற்காக கடந்த 24 மணிநேர விவாதம் நடைபெற்ற பிறகு எதிர்க்கட்சிகள் சார்பில் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய மாக்சிஸ் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் விவாதத்திற்கு பதிலளித்துப் பேசினார்.

# தி. மு. க விலிருந்து ராகவானந்தம் விலகினார்

(தமிழ்நாடு)

முன்னாள் அமைச்சர் திரு. ராகவானந்தம் தி. மு. க. கழகத்தில் இருந்து விலகி எம். ஜி. ஆர். அ. தி. மு. கழகத்தில் சேர்ந்து கொண்டுள்ளார். நேற்று முன்தினம் சென்னையில் எம். ஜி. ஆர். அ. தி. மு. கழகத்தின் பொதுச்செயலாளர் எஸ். திருநாவுக்கரசு முன்னிலையில் அவர் அக்கட்சியில் சேர்ந்துகொண்டார்.

கட்சியின் அவைத்தலைவராக அவரை திருநாவுக்கரசு நியமித்துள்ளதாக அறிவித்திருக்கின்றார். இதுவரை அவைத்தலைவராக இருந்த வே. பாலகுர ரெட்டியார் அக்கட்சியின் மூத்த துணைப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

# குடிநீர் விநியோகத்திற்கும் ஆயுதப்பாதுகாப்பு ஏற்பாடு

(சென்னை)

சென்னை நகரில் குடிதண்ணீர் விநியோக லொறிகளுக்கு ஆயுதம் தாங்கிய காவலர்களின் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

சில சமூகவிரோதிகளினால் தண்ணீர் லொறிகள் தாக்கப்படுவதாக வந்த புகாரை அடுத்தே தண்ணீர் லொறிகளுக்கு கடந்த சில நாட்கள் தொடக்கம் இத்தகைய பாதுகாப்பு அளிக்கப்படுவதாக சென்னை நகர காவல்துறை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

[illegible] தப்பிச் சென்றிருப்பதும் தமிழக அரசின் மறுப்பு தவறானது என்பதை நிரூபிப்பதாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

# 'வாதுவ' திரும்பியது

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்கு துறையில் மா இறக்கி முடித்த 'வாதுவ' கப்பல் நேற்றுமுன்தினம் மாலை கொழும்புநோக்கி புறப்பட்டது. (யோ)

## பருத்தித்துறை இறங்குதுறை விஸ்தரிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்கு துறை திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் இறங்குதுறை மேடை விஸ்தரிக்கப்பட்டதையடுத்து ஒரேதடவையில் ஐந்து லொறிகளுக்கு பொருள்களை ஏற்றக் கூடிய வசதி ஏற்பட்டுள்ளது. (யோ)

# பின் கதவால் வர ஐ. ஐ. தே. மு. முயற்சியாம்

– ரணில் தெரிவிப்பு

[கொழும்பு]

அரசியல் தலைமையை இழந்த நிலையில் ஏமாற்றமடைந்துள்ள ஜனநாயகஐக்கியதேசிய முன்னணியினர் மாகாண சபைத் தேர்தலில் தோற்கப் போவதை உணர்ந்து ஐ. தே. கட்சிக்குள்பின்கதவால்நுழைய முயற்சிப்பதாகக் கொழும்பில் பேசிக்கொள்ளப்படுகிறது. தாங்கள்தான் உண்மையான ஐ. தே. கட்சியினர் என்றும், அடிமட்டச் செல்வாக்கு உள்ளவர்கள் என்று கூறியும் இவர்கள் ஐ. தே. கட்சியில் சேரப் பிரயத்தனம் செய்துள்ளனர். ஆனால், இவர்களது வேண்டுகோள் மறுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கண்டியைச்சேர்ந்தவர்ஒருவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து கண்டியில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் செல்வாக்கு வீழ்ச்சி அடைந்துள்ளதாம். இதனால் காமினி திஸாநாயக்காவுக்கு கண்டியில் இருந்த தளம் ஆட்டம் கண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கண்டியைச் சேர்ந்த விஜயதுங்கா ஜனாதிபதியானது ''கண்டிக்கு அரசன்'' என்றுவர்ணிக்கப்பட்டகாமினி திஸாநாயக்காவின் நன்மைகளுக்கு விரோதமாக அமைந்துள்ளது என்றும், சொல்லப்படுகிறது.

இதனால் ஏமாற்றமடைந்துள்ள ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் வெளிநாட்டுச் செய்தியாளருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு அமைச்சர் சிறிசேன கூரே வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாகவதந்தியை கிளப்பி விட்டுள்ளார்கள் என்றும் ஐ. தே. கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# முல்லைத்தீவுக் கிளை புதுக்குடியிருப்பில் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கை காரணமாக சின்னா பின்னம் ஆகியுள்ள முல்லைத்தீவு வங்கிக் கிளை மிக விரைவில் புதுக்குடியிருப்பில் இயங்குவதற்கு கூட்டுப்படை தலைமை அலுவலகம் அனுமதி அளித்துள்ளது என வட பிராந்திய முகாமையாளர் கொழும்பில் இருந்து அனுப்பிய செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

மேற்படி வங்கி தற்பொழுது தற்காலிகமாக கிளிநொச்சியில் இயங்கி வருகின்றது. புதுக்குடியிருப்புக்கிளையைத் திறப்பதற்கான ஏனைய நடவடிக்கைகளை தற்போது இவ்வட பிராந்திய முகாமையாளர் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (நி)

ராஜாவை விடுதலை செய்யக் கோரி அவரின் தாயார் அரிய குட்டி செல்லம்மா என்பவரே சட்டத்தரணி திருமதி வி. ஸ்ரீகாந்தா ஊடாக மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவை நீதியரசர்கள் டி.பி.எஸ். குணசேகரன், எதுசூரியா ஆகியோர் விசார [illegible]

[illegible] முற்றுகையிட்ட 4ஆம் மாடி சி. ஐ. டி. பொலிசாரால் என் மகனும் மேலும் 12 பேரும் கைது செய்யப்பட்டார்கள். மேலும் அவர் கைது செய்யப்படும்போது வெளிநாடு செல்ல ஆயத்தம் செய்து கொண்டிருந்தார் என குறிப்பிட்டுள்ளார்.

# மா. சபை தேர்தல் பிரசாரம் மீண்டும் சூடுபிடிக்க ஆரம்பம்

இலங்கையின் மாகாணசபை தேர்தல் மீண்டும் சூடு பிடிக்க தொடங்கியுள்ளது. லலித் அத்துலத்முதலி, பிரேமதாசா கொலையை தொடர்ந்து செயலிழந்து இருந்த கட்சிகள் மீண்டும் தமது பிரசார வேலைகளின் உற்சாகமாக ஈடுபட்டுள்ளனர் என கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

பொலிசார் அரசாங்க உத்தியோகத்தர் கட்சி வேறுபாடு இன்றி கடமை ஆற்ற வேண்டும் என்பதை உறுதி செய்யுமாறு எதிர் கட்சி தலைவி சிறிமாவே பண்டாரநாயக்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல்கள் வந்திருப்பதாகவும் இது தொடர்பாக பொலிசாருக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் இதற்கான நடவடிக்கைகளை பொலிசார் மேற்கொள்ளவில்லை எனவும் அக்கடிதத்தில் மேலும் தெரிவித்தார்.

தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ள அரசாங்க கட்சி உறுப்பினர்களுக்கு ரகசிய பொலிஸ் அறிவுரைகள் வழங்கப்பட்டு இருப்பதாக தமக்கு தகவல் கள்கிடைத்ததாக சிறிமாவோ குறிப்பிட்டுள்ளார்.

# விளையாட்டு

ஷப்றா கிண்ணத்துக்காக ''ஜொலி ஸ்ரார்ஸ்'' விளையாட்டுக் கழகம் நடாத்தும் மட்டுப் படுத்தப்பட்ட 30 ஓவர்கள் கொண்ட அரை இறுதியாட்டம் 15ஆம் திகதி சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. ஷப்றா விளையாட்டுக் கழகம் சென்றலைட்ஸ் (சொக்ஸ்) விளையாட்டுக் கழகத்துடன் மோதும். ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் சென்றலைட்ஸ் வி. கழகத்துடன் மோதும். இப்போட்டிகளில் வெற்றியீட்டும் கழகங்கள் ஞாயிற்றுக்கிழமை 16-ம் திகதி இறுதியாட்டத்தில் மோதவுள்ளன. (42)

★ ★

அருணோதய சனசமூக நிலைய 33ஆவது நிறைவு விழாவை முன்னிட்டு நடாத்தப்படும் வடமாகாண ரீதியிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்றும் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பாரதி ச. ச. நி. எதிர்த்து சென்மேரிஸ் ச.ச நி. மாலை 3.00 மணிக்கும் நல்லூர் தெற்கு ச. ச. நி. எதிர்த்து அரியாலை இ. க. சி. ஆகியன மோதுகின்றன.

# தம்மை பலப்படுத்துமாறு தொண்டமான் கோரிக்கை

[கொழும்பு]

வட - கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண எம்மைப் பலப்படுத்துங்கள் எனச் சிறிலங்கா அமைச்சர் தொண்டமான் மக்களைக் கேட்டுள்ளார்.

ஈழநாதம்

ராஜீவ் காந்தி கொலை விசாரணை

# மின்விநியோக துண்டிப்பு; வழக்கு ஒத்திவைப்பு

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை தொடர்பான வழக்கு நடைபெற்றுவரும் இதற்கான விசேடமாக அமைக்கப்பட்ட பூந்தமல்லி நீதிமன்றத்தில் நேற்று திடீரென மின்விநியோகம் துண்டிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நேற்று ஆரம்பமான ராஜீவ் கொலை வழக்கை தொடர்ந்து மேற்கொள்ள முடியாத நிலையில் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு நீதிபதி சித்திக ஒத்திவைத்தார்.

மின் துண்டிப்பிற்கான காரணம் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. பூந்தமல்லி நீதிமன்றம் ராஜீவ் கொலை வழக்கை மேற்கொள்ளவென விசேடமாக அமைக்கப்பட்டு கடும் பாதுகாப்பு இடப்பட்ட வளாகம் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜீவுக்கு பாதுகாப்பு வழங்கத்தவறிய

## தமிழகபொலிஸ்அதிகாரி மீது நடவடிக்கை எருக்க பணிப்பு

(டில்லி)

சிறிபெரம்புதூர் கூட்டத்தில் பாதுகாப்பு குறைபாடு காரணமாகவே ராஜீவ் காந்தி கொல்லப்பட்டமையினால், அன்று பாதுகாப்பிற்கு பொறுப்பாக இருந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசை மத்திய அரசு கேட்டுள்ளது.

ராஜ்யசபாவில் உள்துறை அமைச்சர் எஸ் பி. சவான் இத் தகவலை நேற்று வெளியிட்டார். ராஜீவ் கொலைக்கு தமிழ்நாடுபொலிசார் போதிய பாதுகாப்பு அளிக்க தவறியதே காரணம் என்று இச் சம்பவம் தொடர்பாக வர்மா குழு கூறியிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நீதிபதி இராமசுவாமி:

## பதவிநீக்கும் பிரேரணை பாராளுமன்றத்தில் தோல்வி

(டில்லி)

இந்திய உயர்நீதிமன்ற நீதிபதி வி. இராமசுவாமியை பதவி நீக்கக்கோரி மக்களவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் தோல்வியடைந்தது. எதிர்க்கட்சியினர் சார்பில் கொண்டுவரப்பட்ட இத்தீர்மானத்திற்கு ஆதரவாக 196 பேர் வாக்களித்தனர். எதிராக ஒருவரும் வாக்களிக்கவில்லை 205 பேர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

வாக்கெடுப்பு முடிவை அறிவித்த மக்களவை சபாநாயகர் அரசியல் சட்டப்படி தீர்மானத்திற்கு போதிய பெரும்பான்மை இல்லாமையால் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை என அறிவித்தார். தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமானால் 273 பேர் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும்.

வாக்கெடுப்பில் காங்கிரஸ் கட்சி கலந்துகொள்ளாமைக்கு எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்தன.

## லெப். தமிழ்மல்லனுக்கு மக்கள் இறுதி அஞ்சலி

(சுன்னாகம்)

முல்லைத்தீவு, மணலாற்றுப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற நேரடி மோதலொன்றில் வீரச்சாவடைந்த லெப்டினன்ட் தமிழ்மல்லன் / சுந்தரேஸ் (சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்) மாவீரனுடைய கண்ணீர் அஞ்சலிக் கூட்டமும், இறுதி ஊர்...

...தில் வலிகாமம் மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி சந்திரிக்கா, யாழ். மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் இளையவன் ஆகியோரும் அஞ்சலி உரையாற்றினர். அதனைத் தொடர்ந்து புகழுடல் ''பாண்ட்'' வாத்திய மரியாதையுடன் கோப்பாய் மாவீரர் துயிலும்...

## வீரவணக்கக் கூட்டம்

5ஆம் மாதங்களில் (மே மாதம்) வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வலிகாமம் கோட்டத்தின் நல்லூர் வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம், இன்று இரவு8-00மணிக்கு அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

திரு. சத்தியா, செல்வி சந்திரிகா, திரு. அரசண்ணா ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தவுள்ள இவ்வீரவணக்கக் கூட்ட முடிவில் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (90)

*

தெல்லிப்பழை, உடுவில் வட்டவைப் பிரிவுகளில் வைகாசி மாதம் வீரச்சாவடைந்த மாவீரர்களின் வீரவணக்கக் கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை மல்லாகம் பழம் பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெறும். தெல்லிப்பழை, உடுவில் வட்டவைகளின் பொறுப்பாளர் திரு. ஒப்பிலறிவன் தலைமையில் நடைபெறும் இவ்வீரவணக்கக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் பிரமுகர்களின் அஞ்சலியுரைகளைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (9)

## கருத்தரங்கு

யாழ். நற்சமுக நடுநிலையம் ''இன்றைய உலகில் கணனி'' எனும் பொருள்பற்றியகருத்தரங்கு ஒன்றை எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடாத்தவுள்ளது. 115, 4 ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்கில் திருமதி அருந்ததி ஞானராஜன், கலாநிதி எஸ். மகேசன் ஆகியோர் கருத்துரை வழங்குகின்றனர்.

இதன்போது யாழ்ப்பாணத்தில் கணனி ஆர்வலர் ஒன்றியமும், கணனி நூல் நிலையமும் ஆரம்பிப்பது பற்றியும் ஆராயப்படவுள்ளதாக நற்சமுக நடுநிலைய பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## வருடாந்த பொதுக் கூட்டம்

புற்றுநோய்த் தடுப்புச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு பிலிப் வைத்தியசாலை, 228, பிரதான வீதி. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சங்கப் பணிமனையின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## பதநீர் உற்பத்தியாளர் மூவருக்கு பதக்கங்கள்

வருடந்தோறும் பதநீர் உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியினர் உற்பத்தியாளர் மூவரைத் தேர்ந்தெடுத்து பரிசில்களை வழங்கி வருகின்றனர்.

வெற்றியீட்டியவர்களுக்கு முறையே 1ஆம் பரிசாக தங்கப்பதக்கமும் 2ஆம் பரிசாக வெள்ளிப்பதக்கமும், 3ஆம்...

# லலித் கொலை விசாரணை; அதிகாரி ஒருவர் நீக்கம்

(கொழும்பு)

லலித் அத்துலத் முதலி கொலை குறித்த விசாரணைக்குப்பொறுப்பாக இருந்த குற்றவியல் புலனாய்வுப் பிரிவுப் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அமரசேனா ராஜபக்ஷ அப்பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொலையுண்ட ஜனாதிபதிக்கு மிகவும் வேண்டியவரான இவர், இளைப்பாறும் வயதை ஏலவே எட்டியவர் என்றும், கடமையிலிருந்து ஓய்வுபெற உள்ளார் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் கூறுகின்றன. அதேவேளை கிருலப்பனையில் அத்துலத்முதலியின் பொதுக்கூட்டத்துக்குப் பாதுகாப்பு வழங்காத காரணத்துக்காக களுத்துறைப் பொலிஸ் பயிற்சி நிலையத்துக்கு இடமாற்றம்செய்யப்பட்ட கிருலப்பனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரேமலால் ரணகல கொலையுண்டார் என்று கொழும்பில் பேசிக் கொள்ளப்படுகிறது.

களுத்துறைப் பொலிஸ் பயிற்சி நிலையத்துடன் தொடர்பு கொண்டு இன்ஸ்பெக்டர் பிரேமலால் ரணகல பற்றி விசாரித்தபோது, அவர் வெளியில் சென்றுவிட்டதாகவும், எங்கு போனார், எப்போது திரும்புவார் என்பது பற்றிய விபரங்கள் எதுவும் தெரியாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அத்துலத்முதலிக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டாம் என்று பணித்த சிரேஷ்ட பொறுப்பதிகாரியின் கட்டளைப்படி இயங்கிய அவர், உயிருக்குப் பயந்து தலைமறைவாகியிருக்கலாம் என்றும் பொலிஸ் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

## பிரேமதாசா கொலையில் மேலும் ஒருவர் தொடர்பாம்

(கொழும்பு)

ஜனாதிபதி கொலையுடன் தொடர்புடையவர் எனக் கூறப்படும் நபருடன் கூடஇருந்த இளைஞரை இப்போது புலனாய்வுத்துறையினர் தேடி வருகின்றனராம்.

இவர்களின் கருத்துப்படி இந்த இளைஞர் தற்கொலைப் படைவீரர் என சந்தேகிக்கப்படும் இளைஞருடன் அவரின் பலசரக்குக் கடையில் இருந்தவர் என்றும், விற்பனையில் இவருக்கு உதவி அளித்து வந்தவர் என்றும் கூறப்படுகிறது. ஆனால் குண்டு வெடிப்பிற்கு சில நாட்களுக்கு முன் இவர் கடையிலிருந்து மறைந்துவிட்டாராம்.

இதனிடையே தற்கொலைப் படைவீரர் எனச் சந்தேகிக்கப்படும் நபர் காஸ்வேர்க்ஸ் வீதியில் உள்ள ஒரு கடையில் உணவுப் பொருள்கள் வாங்கவென 31,000 ரூபாவை செலுத்தியுள்ளார் என்றும் இந்த கடையின் உரிமையாளர் இப்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். இதேபோன்று கொலைச் சந்தேக நபரின் பலசரக்கு கடைக்கு அடிக்கடி சென்றுவந்த சிறுவன் ஒருவனும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளான். சந்தேக நபர் முன்பு வசித்த வீடுகளின் உரிமையாளர்களும் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

## பட்டாசு கொளுத்திய குடும்பங்கள் மீது தாக்குதல்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்ட செய்தி கேட்டு பட்டாசு கொளுத்திய மூன்று குடும்பங்கள் தாக்கப்பட்டு அவர்களின் வீடுகளும் சேதமாக்கப்பட்டன. இச்சம்பவம் கம்புறுப்பிட்டிய பகுதியில் நடைபெற்றுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான 13 வயது சிறுமி ஒருவர் அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## தேர்தலில் ஐ. தே. க. தோல்வியடையும் வாய்ப்பு

– பி. பி. ஸி. கருத்து

மாகாணசபை தேர்தலில் ஆளும் ஐ. தே. க. தோல்வியடையும் என்றே எதிர்பார்க்கப்படுவதாக பி. பி. ஸி. தெரிவித்துள்ளது. இத்தேர்தலில் ஐ. தே. க. தோல்வியடைந்தால் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலிலும் ஆளும் கட்சி நிலை சங்கடமே என மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே தேர்தலை கண்காணிக்க கொழும்பு வந்த 10 நாடுகளைச் சேர்ந்த 24 கண்காணிப்பாளர்களும் நேற்று 7 மாகாணங்களுக்கும் தம் பணியை மேற்கொள்ள புறப்பட்டுச் சென்றனர்.

முன்புபோல் இம்முறை தேர்தலில் அதிகம் வன்முறை இடம்பெற மாட்டாது என்றே எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## லலித்தின் உடலில் 25 காயங்கள் இருந்தன

சட்ட வைத்திய அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய விடுதலை முன்னணியின் மறைந்ததேசிய தலைவர் லலித் அத்துலத் முதலியின் உடலில் 16 பெரிய காயங்களும், 9 சிறிய காயங்... நுரையீரல், சுவாசப்பை, இதயம் போன்றவற்றில் காயங்களினால் ஏற்பட்ட இரத்தப் பெருக்கு காரணமாக இவர் மரணம் அடைந்தார் என்றும் தெரிவித்தார்.

ஐ. தே. கட்சிக்குள்...

...காட்டுவதாகவும், இதற்கு ஹேமா பிரேமதாசாவின் அரசியற் பிரவேசமே காரணம் எனவும், ஹேமா பிரேமதாசாவின் நோக்கம் ஐ. தே. கட்சியின் தலைமையைத் தன்வசம் வைத்துக்கொள்வதே ஆகும். அதனால், ஐ. தே. கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் கோபத்...

எதிர்க்கட்சியினர் சார்பில் கொண்டு வரப்பட்ட இத்தீர்மானத்திற்கு ஆதரவாக 196 பேர் வாக்களித்தனர். எதிராக ஒருவரும் வாக்களிக்கவில்லை 205 பேர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

வாக்கெடுப்பு முடிவை அறி...

...தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமானால் 273 பேர் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும்.

வாக்கெடுப்பில் காங்கிரஸ் கட்சி கலந்துகொள்ளாமைக்கு எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்தன.

## ...கூட்டம்

புற்றுநோய்த் தடுப்புச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு பிலிப் வைத்தியசாலை, 228, பிரதான வீதி. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சங்கப் பணிமனையின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

...ஜன், கலாநிதி எஸ். மகேசன் ஆகியோர் கருத்துரை வழங்குகின்றனர்.

இதன்போது யாழ்ப்பாணத்தில் கணனி ஆர்வலர் ஒன்றியமும். கணனி நூல் நிலையமும் ஆரம்பிப்பது பற்றியும் ஆராயப்படவுள்ளதாக நற்சமூக நடுநிலைய பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

...டையும் என்றே எதிர்பார்க்கப்படுவதாக பி. பி. ஸி. தெரிவித்துள்ளது. இத்தேர்தலில் ஐ. தே. க. தோல்வியடைந்தால் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலிலும் ஆளும் கட்சி நிலை சங்கடமே என மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே தேர்தலை கண்காணிக்க கொழும்பு வந்த 10 நாடுகளைச் சேர்ந்த 24 கண்காணிப்பாளர்களும் நேற்று 7 மாகாணங்களுக்கும் தம் பணியை மேற்கொள்ள புறப்பட்டுச் சென்றனர்.

முன்புபோல் இம்முறை தேர்தலில் அதிகம் வன்முறை இடம்பெற மாட்டாது என்றே எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

...க்கு அடிக்கடி சென்றுவந்த சிறுவன் ஒருவனும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளான். சந்தேக நபர் முன்பு வசித்த வீடுகளின் உரிமையாளர்களும் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

# லெப். தமிழ்மல்லனுக்கு மக்கள் இறுதி அஞ்சலி

(சுன்னாகம்)

முல்லைத்திவு, மணலாற்றுப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற நேரடி மோதலொன்றில் வீரச்சாவடைந்த லெப்டினன்ட் தமிழ் மல்லன் / சுந்தரேஸ் (சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்) மாவீரனுடைய கண்ணீர் அஞ்சலிக் கூட்டமும், இறுதி ஊர்வலமும் நேற்று முன்தினம் சுன்னாகத்தில்இடம்பெற்றது.

சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலையத்தில் வைக்கப்பட்ட இம்மாவீரனுடைய புகழுடலுக்கு பெருந்தொகையான மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர். மக்களின் அஞ்சலியைத் தொடர்ந்து இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டம் உடுவில், தெல்லிப்பழை வட்டவைப் பொறுப்பாளர் திரு. ஒப்பிலறிவன் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் வலிகாமம் மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி சந்திரிக்கா, யாழ். மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் இளையவன் ஆகியோரும் அஞ்சலி உரையாற்றினர். அதனைத் தொடர்ந்து புகழுடல் ''பாண்ட்'' வாத்திய மரியாதையுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது

(11)

# பதநீர் உற்பத்தியாளர் மூவருக்கு பதக்கங்கள்

வருடந்தோறும் பதநீர் உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியினர் உற்பத்தி எழுச்சி வாரத்தை முன்னிட்டு சிறந்த பதநீர் உற்பத்தியாளர் மூவரைத் தேர்ந்தெடுத்து பரிசில்களை வழங்கி வருகினறனர்.

வெற்றியீட்டியவர்களுக்கு முறையே 1ஆம் பரிசாக தங்கப்பதக்கமும் 2ஆம் பரிசாக வெள்ளிப்பதக்கமும், 3ஆம் பரிசாக வெண்கலப் பதக்கமும் வழங்கப்பட்டுவருகின்றன

இவ்வருடம் வெற்றியீட்டியோர் விபரம் :

1ஆம் பரிசு : க. யோகேந்திரம் - பளை, தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்.

2ஆம் பரிசு பொ. மாணிக்கசிங்கம் - அரியாலை தெ. ப. பொ. உ. விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்.

3ஆம் பரிசு மு. விமலராசா - சங்கானை தெ. ப. பொ. உ. விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்

# இடம் பெயர்ந்தோருக்கு உணவு முத்திரை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கான இலவச நிவாரண உலர் உணவு முத்திரை அவரவரது கிராம சேவகர்கள்மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

இம் முத்திரைகளை இன்று தொடக்கம் இடம்பெயர்ந்த தீவக மக்கள் தங்களது இலவச உலர் உணவு அட்டையை கிராமசேவகர்களிடம் ஒப்படைத்து தங்களுக்கான முத்திரைகயைப் பெற்று அதற்குரிய பொருள்களை தத்தமது சங்கங்களில் பெற்றுக்கொள்ளுமாறு மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (சி)

# லலித்தின் உடலில் 25 காயங்கள் இருந்தன

## சட்ட வைத்திய அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய விடுதலை முன்னணியின் மறைந்ததேசிய தலைவர் லலித் அத்துலத் முதலியின் உடலில் 16 பெரிய காயங்களும், 9 சிறிய காயங்களும் இருந்ததாக வைத்திய அறிக்கை தெரிவிக்கின்றது.

அத்துலத் முதலி கொலை தொடர்பாக கமிஷன் முன் சாட்சியம் அளித்த கொழும்பு பொது மருத்துவமனை சட்ட வைத்திய அதிகாரி பி. எஸ். டி. அல்விஸ் நேற்று இவ்வாறு தெரிவித்தார். லலித் அத்துலத் முதலியின் உடலில் இரண்டு துப்பாக்கி குண்டுகள் இருந்ததாகவும், இவரின் நுரையீரல், சுவாசப்பை, இதயம் போன்றவற்றில் காயங்களினால் ஏற்பட்ட இரத்தப் பெருக்கு காரணமாக இவர் மரணம் அடைந்தார் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை முகலன் வீதியில் இறந்து கிடந்ததாக கூறப்பட்ட இளைஞனின் சடலத்தில் ஐந்து காயங்கள் இருந்ததாகவும், அவரின் தொண்டைக்குழியில்சைனைட்காணப்பட்டதென்றும்,வாயில் காயம் ஏற்பட்டு இருந்ததாகவும் எனவே இவர் சைனைட் அருந்தியே மரணமானார் என அறிக்கை தெரிவிக்கின்றது.

## மாகாணசபை

கொள்வது அவசியம் எனவும் வேட்பாளர் தேர்தலில் ஈடுபடும் ஊழியர்கள் ஆகியோரை துன்புறுத்துவது அல்லது பயமுறுத்துவது அல்லது அவர்களது உடலுக்கு ஊறு விளைவிப்பது போன்ற சட்ட விரோதமான நடவடிக்கைகளில் எவரும் ஈடுபடாமல் இருப்பதை உறுதி செய்யுமாறும் சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

## லலித்

தெரிந்ததே.

இதே போன்று திருமதி ஹேமா பிரேமதாசாவையும் அரசியலுக்குள் கொண்டுவர ஐ.தே.கவின் ஒருசாரார்முயற்சித்து வருகின்றனர். ஒரு பிரபல வர்த்தகரும் கட்சிப் பிரமுகர்கள் சிலரும் இந்த முயற்சியில் மும்முரமாக உள்ளனர்.

## பம்பலப்பிட்டி

# ரயில் நிலையமருகே கண்ணிவெடி கண்டுபிடிப்பு

(கொழும்பு)

பம்பலப்பிட்டி ரயில்வே நிலையம் அருகே நேற்று அமுக்க கண்ணிவெடி ஒன்று கண்டெடுக்கப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது. ரயில்வே நிலையமருகே கடற்கரையில் பாறை ஒன்றின் மீது இந்த அமுக்க கண்ணிவெடி இருந்ததை அங்கு சென்ற ஒருவர் முதலில் கண்டார்.

நான்குகிலோ நிறையுடைய இந்த கண்ணிவெடியை இராணுவத்தின் குண்டு செயலிழக்கும் பிரிவினர் செயலிழக்கச் செய்தனர் என தெரிவிக்கப் படுகிறது.

## 600 ரூபா

கிடைப்பதாகத் தெரிவித்தார். 2000 ரூபாவிற்கும்,3 000ரூபாவிற்கும் இடைப்பட்ட மாதாந்தச் சம்பளம் பெறுவோருக்கு இந்த கொடுப்பனவின் ஒரு பகுதி மட்டுமே தற்பொழுது கிடைக்கிறது. அடுத்த மாதம் 1ஆம் திகதி தொடக்கம் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் பெறுவோருக்கும் 600 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும். மாதாந்தம் 260 ரூபா வாழ்க்கைப்படி எதிர்வரும் 1ஆம் திகதி தொடக்கம் ஒய்வூதியம் பெறுவோருக்கு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1987ஆம் ஆண்டு டிசம்பர் மாத முடிவுக்கு முன்னர் ஓய்வூதியம் பெற்றவர்களும் 1600 ரூபாவுக்கு குறையாத மொத்த ஓய்வூதியம் பெறுபவர்களும் இவர்களில் அடங்குவர். 1988ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதிக்கும் 1992ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதிக்கும் இடையில் ஓய்வுபெற்று மாதாந்த மொத்த ஓய்வூதியமாக 2975 ரூபாவிற்கு குறைவான ஓய்வூதியம் பெறுபவருக்கும் இந்த வாழ்க்கைச் செலவுப்படி கிடைக்கும்.

மாதாந்த மொத்த ஊதியம் 4060 ரூபாவிற்கு குறைவாக இருப்பின் அவர்களுக்கும் அடுத்தமாதம் முதலாம் திகதி தொடக்கம்260ரூபாமாதாந்த வாழ்க்கைச் செலவுப்படியை பெறுவதற்கு உரித்துடையோர் ஆவர் என அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## ஐ தே. கட்சிக்குள்

காட்டுவதாகவும், இதற்கு ஹேமா பிரேமதாசாவின் அரசியற் பிரவேசமே காரணம் எனவும், ஹேமா பிரேமதாசாவின் நோக்கம் ஐ. தே. கட்சியின் தலைமையைத் தன்வசம் வைத்துக்கொள்வதே ஆகும். அதனால், ஐ தே. கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் கோபத்திற்கு ஆளாகியிருப்பதாகவும் தெரிவித்தார்.

எயர்லங்காவின் இயக்குநர் சபையில் பிரேமதாசாவின் மருமகன் முக்கியமானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# விவசாயிகளுக்கு மண்ணெய்

பயறு, எள்ளு, கௌபி போன்ற பயிர்களை உற்பத்தி செய்துள்ள யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விவசாயிகளுக்குமட்டுமே இனி மேல் மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. [24]

## விண்ணப்ப

அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை ''செயலாளர் கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு, திருக்கோணமலை'' என்கின்ற விலாசத்திற்கு முடிவுத் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (பா)

## நாட்டின்

பெரிதாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள். மாகாணசபை தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்தால் அது டி. பி. விஜயதுங்காவின் பதவிக்கு ஆட்டம்கொடுக்கும். அப்போது ஹேமா பிரேமதாசா தான் சொன்னதைச் செய்துகாட்டவும்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்களை

னத்தில் கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டார்

ஜனாதிபதி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டது குறித்து எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்த கருத்தைத் தான் ஆதரிப்பதாகவும் தினேஷ் குணவர்த்தனா தெரிவித்தார்.

# தாலிக்கொடி கண்டெடுப்பு

கைதடி பாலத்தடியில் தாலிக்கொடி ஒன்று பொதுமகன் ஒருவரால் கண்டு எடுக்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சென்ற 10ஆம் திகதி திங்கட்கிழமை கைதடி நாவற்குழியைச் சேர்ந்த பெண் ஒருவர் தனது தாலிக்கொடியை கைதடி பாலத்தடியில் தவறவிட்டு விட்டார். அத் தாலிக்கொடியை பொதுமகன் ஒருவர் கண்டெடுத்து கைதடி விடுதலைப் புலிகளின் வட்டச் செயலகத்தில் ஒப்படைத்தார். பின்பு தொலைத்தவர் தனது தாலிக்கொடியை அடையாளம் காட்டி நேற்று முன்தினம் பெற்றுக்கெண்டார். இக் கொடி 4 பவுண் எனக் கூறப்படுகின்றது. (82)


## அறிவித்தல்

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத் திருவிழாக் காலத்திற்கான கடைகள் வழங்குதல், நாளை 14-05-1993 (வெள்ளிக்கிழமை) காலை 10 00 மணிக்கு ஆலய வெளிவீதியில் நடைபெறும்.

- நிர்வாகம்.

(4861)

## அறிவித்தல்

சுதுமலை அம்மன் ஆலயத் திருவிழாக் காலத்திற்கான கடைகள் வழங்குதல், எதிர்வரும் 15-05-1993 (சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு ஆலய வெளிவீதியில் நடைபெறும்.

- நிர்வாகம்.

(4860)

வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு நடாத்தும்

## கலை நிகழ்ச்சிகள்

மருதனார் மடம் கல்விக்கோட்டம்

நடைபெறும் இடம் : யா / இராமநாதன் கல்லூரி

காலம் : 14 - 05 - 93 (வெள்ளி)

நேரம் : இரவு 7.00 மணி

பண்டத்தரிப்புக் கல்விக்கோட்டம்

நடைபெறும் இடம் : யா / வட்டு திருஞானசம்பந்த வித்தியாலயம்

காலம் : 15 - 05 - 93 (சனி)

நேரம் : இரவு 7.00 மணி

★ நுழைவுச்சீட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக் கொள்ளலாம்.

அன்பளிப்பு : 5ரூபா, 10 ரூபா, 15 ரூபா

அனைவரது ஆதரவினையும் அன்புடன் வேண்டுகிறோம் (சி-6618)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 13 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.